# புற்றுநோயின் குறிகள் மற்றும் அறிகுறிகள் யாவை?

புற்றுநோயின் பொதுவான குறிகள் மற்றும் அறிகுறிகள் சிலவற்றை தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இந்த அறிகுறிகள் இருப்பதால் , புற்றுநோய் உள்ளது என்பதும் கிடையாது, ஆனால் இந்த அறிகுறிகள் நீண்ட நாள் நீடித்து , கடுமையாக இருக்கும்பொழுது மருத்துவரின் ஆலோசனை தேவைப்படுகின்றது..

## விளக்கமளிக்கமுடியாத எடை குறைவு

- எந்த காரணமும் இல்லாத எடை குறைவை விளக்கமளிக்கமுடியாத எடை குறைவு என்று அழைப்பார்கள்.



- 10 பவுண்ட்கள் (4.5 கிலோ) அல்லது அதற்கும் அதிகமான விளக்கமளிக்கமுடியாத எடை குறைவு ஏற்படுதல் புற்றுநோயின் முதல் அறிகுறியாக இருக்கலாம்.
- இது பெரும்பாலும் கணையம், வயிறு, உணவுக்குழல், அல்லது நுரையீரல் புற்றுநோயால் ஏற்படும்.

## காய்ச்சல்

- பெரும்பாலும் அனைத்து புற்றுநோய் நோயாளிகளும் சில நேரங்களில் காய்ச்சல் வரக்கூடும், குறிப்பாக புற்றுநோயோ அல்லது அதன் சிகிச்சை முறையோ நோய் எதிர்ப்பு மண்டலத்தை பாதிக்கும் போது ஏற்படக்கூடும்.
- காய்ச்சலானது இரத்த புற்றுநோய்களான லுகீமியா அல்லது லிம்போபா போன்ற புற்றுநோய்களுக்கு ஆரம்ப அறிகுறியாக இருக்கலாம்.

## தளர்வு/சோர்வு

- இது ஓய்வு எடுத்தபோதும் சரி ஆகாத கடும் சோர்வு ஆகும்.
- புற்றுநோய் வளர்ந்து வருவதால் இது முக்கியமான அறிகுறியாக இருக்ககூடும்.
- சில புற்றுநோய்களான லுகீமியா போன்றவற்றை ஆரம்ப நிலையிலும் ஏற்படக்கூடும்.



## வலி

- இது எலும்பு புற்றுநோய் அல்லது விரை புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
- தீராத தலைவலி அல்லது சிகிச்சை அளிப்பின் மூலமாக சரியாகும் தலைவலி போன்றவை மூளை புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
- பின்புற வழியானது பெருங்குடல், மலக்குடல் அல்லது கருப்பை புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
- பெரும்பாலும், புற்றுநோயால் ஏற்படும் வலி அது எங்கு தொடங்கியதோ அங்கே ஏற்கனவே பரவத்தொடங்கியிருக்ககூடும் (மெட்டாசைச்ட்)



## சரும மாற்றம்

- சரும புற்றுநோய் உடன் , இதர சில புற்றுநோய்களும் சரும மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் .

இதன் அறிகுறிகள் :

- ✓ கருமையாக காணப்படும் சருமம் (ஹைப்பர்பிக்மேண்டேஷன்)
- ✓ மஞ்சள் சருமம் மற்றும் கண்கள் (மஞ்சள்காமாலை)
- ✓ சிவந்த சருமம் (எரிதீமா)
- ✓ அரிப்பு (ப்ருரிடஸ்)
- ✓ அதிகமான முடி வளர்ச்சி

## மலம் கழிப்பு பழக்கம் அல்லது சிறுநீர்ப்பையில் செயல்பாட்டில் மாற்றங்கள்

- நீண்ட நாள் நீடித்திருக்கும் மலச்சிக்கல், வயிற்றுபோக்கு அல்லது மலம் கழிதல் அளவில் மாற்றம் போன்றவை பெருங்குடல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
- சிறுநீர் கழிக்கும்போது வலி, சிறுநீரில் இரத்தம்  அல்லது சிறுநீர் கழிப்பு செயல்பாட்டில் மாற்றம் போன்றவை **சிறுநீர்ப்பை அல்லது புரோஸ்டேட் புற்றுநோயுடன்** தொடர்புடையவைகளாக இருக்கலாம்.

## வழக்கமற்ற இரத்தபோக்கு அல்லது வெளியேற்றம்.

- வழக்கமற்ற இரத்தபோக்கு , ஆரம்ப அல்லது முற்றிய புற்றுநோய்யில் ஏற்படக்கூடும்
    - இரும்பும்போது சளியில்(ப்ளம்)  இரத்தம் ; **நுரையீரல் புற்றுநோய்**
    - மலத்தில் இரத்தம் (இது மிகவும் கருமையான அல்லது கருப்பு மலம் போன்று இருக்கும்); **பெருங்குடல் அல்லது மலக்குடல் புற்றுநோய்**
    - பெண்ணுறுப்பில் வழக்கமற்ற இரத்தபோக்கு ; **கருப்பைவாய் புற்றுநோய் அல்லது என்டோமீற்றியம் (கருப்பை சுற்றியுள்ள பகுதி)**
    - சிறுநீரில் இரத்தம் :**சிறுநீர்ப்பை அல்லது சிறுநீரக புற்றுநோய்**
    - முலைக்காம்பில் இருந்து இரத்த வெளியேற்றம் : **மார்பு புற்றுநோய்**

## மார்பில்  அல்லது உடலில் இதர பகுதிகளில் தடிப்பு அல்லது கட்டி

- பல புற்றுநோய்கள் சருமம் வழியாக உணரப்படுகின்றது.
- இந்த புற்றுநோய்கள் பெரும்பாலும் மார்பு, விரைப்பை, நிணநீர்முடிச்சு(சுரப்பிகள்), மற்றும் உடலின் மென்மையான திசுக்களில் ஏற்படும்.